EASTERN UNIVERSITY, SRI
2 1 FEB 20..

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதலாம் வருட முதலாம் அரையாண்டிற்கான பொதுக்கலைமாணித் தேர்வு (2015/2016)

## ..-1112 கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள் (Basic Concepts of Education)

..: 02 மணித்தியாலங்கள

.. I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களுக்கும் ..த்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

## பகுதி I

அ. கல்வி தொடர்பான நவீன வரைவிலக்கணம் ஒன்றினை உமது பார்வையில் குறிப்பிட்டு அவ் வரைவிலக்கணத்தின் மூலம் கல்விச் சமூகம் எவ்வகையில் விழிப்படையும் ..ன்பதையும் சுருக்கமாகத் தருக? (05 புள்ளிகள்)

ஆ. கல்விக்கான வரைவிலக்கணங்கள் மாறுபடுவதற்கான பொதுவான காரணங்களில் "புதிய கல்விக்கான கோட்பாடுகளின் உருவாக்கமும் அதன் பிரயோகங்களும்" எவ்வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை சுருக்கமாகத் தெளிவுபடுத்துக? (05 புள்ளிகள்)

இ. "கல்விக்கான நோக்கங்கள் ஒருமனிதனை சமூகப் பொருத்தப்பாடுடையவனாக வாழ்வதற்கு வழிசமைக்க வேண்டும்" அந்தவகையில் ஆரம்பகால கல்வி நோக்கங்களில் இருந்து தற்போதய கல்வி நோக்கங்கள் எவ்வகையில் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளைக் கொண்டுள்ளன என்பதனை மூன்று (03) ஆதாரங்கள்காட்டி சுருக்கமாக விளக்குக? (10 புள்ளிகள்)

அ. "ஆசிரியர்கள் ஞான விளக்குகள்" எனும் சோக்ரடிஸின் (Socrates) கருத்துக்களை ஆத்ாரமகக்கொண்டு இயற்கை வாதத்தின் தந்தை ஆசிரியர்கள் தொடர்பாக முன்வைத்த கருத்துக்களைப் பட்டியற்படுத்துக? (05 புள்ளிகள்)

ஆ. "ஆசிரியர் தொழிலுக்கான அந்தஸ்து இன்று வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது." அந்தவகையில் ஆசிரியர் தொழில் ஓர் உயர்வகைத் தொழில் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் ஐந்தினை (05) உதாரணம் காட்டி வரிசைப்படுத்துக? (05 புள்ளிகள்)

இ. இன்றைய நிலையில் ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது உயர்தொழிலுக்கான பண்புகளைக் கூட்டிக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள

வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றிற்காக நீர் முன்வைக்கும் பரிந்துரைகள் மூன்றினைப் (03) பகுப்பாய்வு செய்க? (10 புள்ளிகள்)

3. பின்வரும் நான்கு விடயங்கள் தொடர்பான விளக்கத்தினை குறிப்பாக விளக்குக.

அ. **"விவேகாணந்தரின்"** கல்வி தொடர்பான முக்கிய கருத்துக்கள்.

ஆ. **"சிறுவர் உரிமைகளில் உள்ள மாணவர் சார் உரிமைகள்" (Student's rights)**

இ. இலட்சியவாத ஆசிரியரும் புரோபலின் **"குழந்தைப் பூங்காவும்" (Kinder-garden)**

ஈ. **"வளர்ந்தோர் கல்வி"** (Adults Education) பெறும் முக்கியத்துவம். (4x5=20 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. பிளாட்டோ (Plato) கல்வி தொடர்பாகக் கூறிய கருத்துக்களில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றினை வரிசைப்படுத்துக? (05 புள்ளிகள்)

ஆ. ஜோன் டியூவி இன் (John Dewey) கல்விச் சிந்தனைகளில் ஒன்றான **"முயன்று தவறுதல் மூலம் பயன்பாட்டுவாதி கற்றல் முறையை விருத்தியடையச் செய்கின்றான்"** இக் கூற்று பெறும் முக்கியத்துவத்தினை பயன்பாட்டுவாத கல்விக் கொள்கைகளோடு தொடர்புபடுத்தி சுருக்கமாக ஆராய்க? (10 புள்ளிகள்)

இ. **"பிள்ளையின் தேவைக்கு அதிகமாகவோ அல்லது முரண்பட்டவிதத்திலோ கல்வியைத் திணிக்கக் கூடாது."** என்கின்றது இயற்கைவாதம் (Naturalism) இவ் வாதத்தின்படி இன்றைய கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளனவா ? என்பதனை விமர்சனரீதியாக ஆராய்க? (15 புள்ளிகள்)

5. அ. கல்வியமைச்சின் இறுதி நிறுவனம் என்று கருதப்படும் ஒன்றின் கட்டமைப்பினை வரைந்துகாட்டி அதன் கட்டமைப்புக்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்துக? (05 புள்ளிகள்)

ஆ. "முறைசார் (Formal Education) கல்விச் செயன்முறைகளுக்கு, இன்றைய முறையில் கல்விச் செயன்முறைகள் (Informal Education) ஊக்கமளிப்பதாகக் காணப்படும்போதுதான் விளைதிறனான கல்வியை வழங்க முடியும்" இக்கூற்றிற்கான பொருத்தப்பாட்டினை பொருத்தமான உதாரணங்கள் காட்டி ஆராய்க? (10 புள்ளிகள்)

இ. பன்முகப்படுத்தலின் பின்னர் கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களில் மாகாணக் கல்வி முறையின் தற்போதய கட்டமைப்புக்களில் மாகாணக்கல்வித் திணைக்களம் (PED) மற்றும் வலயக்கல்வித் திணைக்களம் (ZED) தொடர்பாகவும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விபரிக்குக? (15 புள்ளிகள்)

அ. இலங்கையில் இன்றைய அரசாங்கம் மாணவர்களின் தொழிற் தேவையைக் கருத்திற்கொண்டு உருவாக்கிய தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் (NVQ) - Levels இனைப் பட்டியற்படுத்துக? (05 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் உள்ள இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சவால்களில் முக்கிய இரு (02) விடயங்கள் தொடர்பாக சுருக்கமாக பகுப்பாய்வுசெய்க? (10புள்ளிகள்)

இ. இலங்கையின் தற்போதய தேசிய கல்விக்கொள்கைகளின் விரிவாக்கமும் வளர்ச்சியும் சுதந்திரத்திற்குப் பின்னர் எவ்வகையில் வளர்ச்சி பெற்றதென்பதனை ஆண்டுகள் ரீதியான ஆதாரம் காட்டி நவீன கல்விக் கொள்கைகள் வரை வரிசைப்படுத்தி மதிப்பிடுக?

(15 புள்ளிகள்)